**செய்தி வெளியீடு எண்:026** **நாள்: 11.01.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மலேசியாவிற்கான இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளின் உட்கட்டமைப்பின் சிறப்பு தூதர் மாண்புமிகு டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்களை இன்று (11.1.2017) தலைமைச் செயலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். அப்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் பேசிய விவரம் பின் வருமாறு:–

"மரியாதைக்குரிய மலேசியா நாட்டின் சிறப்பு தூதர் மாண்புமிகு டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்களையும், மலேசிய நாட்டின் உயர் அதிகாரிகளையும், தமிழ்நாட்டின் சார்பில் வரவேற்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திடீரென மறைவெய்தி, எங்களை மீளாத்துயரில் ஆழ்த்திய நேரத்தில், மலேசிய நாட்டின் மாண்புமிகு சிறப்பு தூதர் அவர்கள், சென்னைக்கு நேரில் வருகை தந்து, எங்களுக்கு ஆறுதல் கூறியமைக்காக, தமிழக அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்கும், மலேசியா நாட்டிற்கும், பல ஆண்டுகளாக மிக நெருங்கிய உறவுகள் இருக்கின்றன. மலேசிய நாட்டிலிருந்து தங்களைப் போன்ற பெருமக்களும், மாண்புமிகு அமைச்சர்களும் தமிழ்நாட்டிற்கு வருகை தருவதன் மூலம், இத்தகைய உறவுகள் மேலும் வலுப்படுகின்றன.

தாங்கள், தமிழ்நாட்டின் மிக நெருங்கிய நண்பர் ஆவீர்கள். இதற்கு முன்பு, பலமுறை தாங்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்து, எங்கள் அனைவரையும் சந்தித்து, தமிழ்நாட்டில் முதலீடுகளை எவ்வாறு அதிகரிக்க வேண்டும் என்பதற்கு பல ஆலோசனைகளை வழங்கி வந்துள்ளீர்கள். இதுபோன்று முதலீடுகளை, கூடுதலாக எவ்வாறு சேகரிப்பது என்பதற்கு, தாங்கள் பல்வேறு உதவிகள் செய்துள்ளீர்கள்.

தமிழ்நாட்டைச் சார்ந்த அதிகாரிகள் கடந்த 2015 ஆம் ஆண்டில், மலேசியா நாட்டிற்குப் பயணம் செய்து, பல்வேறு தொழில் துறைகளில் தமிழ்நாட்டிற்கு மலேசியா நாட்டிலிருந்து முதலீடுகள் செய்வது தொடர்பாக பயனுள்ள பல பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். மேலும், எங்கள் மரியாதைக்குரிய தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில், கடந்த 2015 ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்தில், உலக அளவிலான முதலீட்டாளர்கள் மாநாடு, சென்னையில் நடைபெற்றபோது, மலேசியா நாட்டைச் சார்ந்த, பல்வேறு முதலீட்டாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்வதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2015 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் சந்திப்பின்போது, மலேசியா நாட்டின் திம்மா லிங்கட் என்ற தொழில் கூட்டமைப்பு நிறுவனம், தூத்துக்குடி மாவட்டத்தில், உர உற்பத்தியுடன் கூடிய, ஒரு மிதக்கும் திரவ நைட்ரஜன் சேமிப்பு எரிவாயு கிடங்கு அமைக்க, புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை கையெழுத்திட்டது. இதன் முதலீடு சுமார் 12,600 கோடி ரூபாய் ஆகும். இந்நிறுவனம், தன்னுடைய முதலீட்டுக்கான ஏற்பாடுகளை விரைவில் இறுதி செய்ய, மலேசிய அரசு உதவ வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இதன் மூலம், தென் தமிழ்நாட்டில், பெரிய முதலீட்டுடன் கூடிய ஒரு தொழிற்சாலை விரைவில் அமைவதோடு, இரு நாடுகளுக்கு இடையேயான தொழில்களும், நல்லுறவும் மேம்படும்.

மேலும் முதலீட்டுத் துறையில், மலேசிய நாட்டிலிருந்து தமிழ்நாட்டில் மேற்கொள்ள வேண்டிய முதலீடுகளை அதிகரிப்பதற்கு, நீங்கள் தொடர்ந்து உதவி அளிக்க வேண்டும் என்றும் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொலைநோக்கு திட்டம் 2023–ன் கீழ், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் கட்டமைப்பு வசதிகளை தொடர்ந்து மேம்படுத்த வேண்டும் என்று உறுதி பூண்டிருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்குவதுதான், இந்த அரசின் முக்கியமான நோக்கமாகும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், மலேசிய அரசுடன் இணைந்து செயல்பட நாங்கள் மிகவும் ஆர்வத்துடன் உள்ளோம்.

வரும் காலங்களில் மக்களின் சுகாதாரத்தைப் பேணிக்காப்பதில், உலகளவில் வரும் சவால்களைச் சமாளித்திட, நாம் ஒத்துழைப்புடன் செயல்பட்டு, அந்த சவால்களை வெற்றிகொள்வோம்.

தமிழ்நாட்டில் தங்களது வருகை, மலேசிய நாட்டிற்கும், எங்கள் தமிழ்நாட்டிற்கும் மிகுந்த பயனுள்ள வகையில் அமையும் என்ற எனது உறுதியான நம்பிக்கையை தெரிவித்துக் கொள்கிறேன். “

மலேசியாவிற்கான இந்தியா மற்றும் தெற்காசிய நாடுகளின் உட்கட்டமைப்பின் சிறப்பு தூதர் மாண்புமிகு டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல் பட ஆவலுடன் இருப்பதாக தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, மலேசிய சிறப்பு தூதரின் முதன்மைச் செயலாளர் திரு E. சிவபாலன், மலேசிய நாட்டிற்கான இந்திய தூதர் திரு அஹமது பசாரசம் பின் அப்துல் ஜலில், தலைமைச் செயலாளர் முனைவர் (திருமதி) கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அரசு ஆலோசகர் திருமதி.ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. (ஓய்வு) மற்றும் அரசு உயரதிகாரிகள் உடனிருந்தனர்.

**வெளியீடு:– இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**